## மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் செய்யூர்

அசல் வழக்கு எண்.16/2020

**DW1**

| | | |
|---|---|---|
| பெயர். திரு.செல்வராஜ் | த/பெ.திரு.ஏகாம்பரம் | நாள்.20.02.2026 |

பி.வா.சா.1 அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

வாதி என்ன பரிகாரம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சொத்து கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்தின் சர்வே எண் என்ன என்றால் 184/4 அதன் விஸ்தீரணம் 1 ஏக்கர் 65 செண்ட். அது புஞ்சை நிலம். தாவா சொத்து ஆதியில் என் தாத்தா நடேசனுக்கு கிரைய மூலம் பாத்தியமானது என்றால் சரிதான். என் தாத்தாவுக்கு 3 பிள்ளைகள் அவர்கள் பெயர்கள் 1. சுந்தரவிநாயகம், 2. ஏகாம்பரம் மற்றும் சிதம்பரம் ஆகியோர்கள் வாரிசுகள்.

2. என் தாத்தா நடேசனின் சொத்தில் அவரது வாரிசுகள் 3 பேருக்கும் தலா 1/3 பாகம் உள்ளது என்றால் சரிதான். என் தாத்தாவின் மூத்த மகன் சுந்தர விநாயகத்திற்கு 1வது பிரதிவாதி வாரிசு என்றால் சரிதான். சிதம்பரம் என்பவருக்கு 2 மற்றும் 3வது பிரதிவாதிகள் வாரிசுகள் என்றால் சரிதான். எனது அப்பா ஏகாம்பரத்திற்கு நான் (செல்வராஜ்), எனது தங்கை சரோஜா, முத்துக்கண்ணி, சிவாநந்தம் ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் வாதியும், சிவாநந்தம் என்பவரும் என் அப்பாவின் வப்பாட்டியின் வாரிசுகள்.

3. எனது அப்பா ஏகாம்பரத்திற்கு எனது தாத்தாவின் சொத்திலிருந்து எவ்வளவு பாகம் கிடைத்தது என்றால் 50-1/2 செண்ட் கிடைத்தது. எனது தாத்தாவின் சொத்தை எனது அப்பாவும், அவரது சகோதரர்களும் கூட்டாக தான் அனுபவம் செய்து வந்தார்கள். பின்னர் அவர்கள் பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள். அவர்கள் மூன்று பேர் பெயரிலும் பட்டா இருந்தது என்றால்

சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 தான் அந்த பட்டா என்றால் சரிதான்.

4. எனது அப்பாவுக்கு கிடைத்த சொத்தில் எனக்கும், முத்துக்கண்ணி, சிவாநந்தம் மற்றும் சரோஜாவுக்கு பாகம் உண்டு என்றால் சரிதான். எனது தங்கை சரோஜா என்பவர் இறந்துவிட்டார். எனது அப்பா இறந்தபிறகு நாங்கள் நால்வரும் கூட்டாக அனுபவம் செய்து வந்தோம் என்றால் 25–1/2 செண்ட் நிலத்தை நான் எடுத்துக்கொண்டேன். 25 செண்ட் நிலத்தை சிவாநந்தத்திற்கு எழுதி கொடுத்துவிட்டேன். என்னுடைய பாகத்தை நான் வேறு ஒருவருக்கு கிரையம் கொடுத்துவிட்டேன்.

5. பி.வா.சா.ஆ.1ன் அடிப்படையில் நான், முருகவேல், சிவாநந்தம், ஜெயராம், ஏழுமலை ஆகியோர் பாகப்பிரிவினை செய்து கொண்டோம் என்றால் சரிதான். எனது அப்பாவின் வாரிசுகளான சரோஜாவும், வாதி முத்துக்கண்ணியும் பி.வா.சா.ஆ.1ல் தரப்பினர் இல்லை என்றால் சரோஜாவும், அவரது கணவரும் இறந்துவிட்டார்கள். சரோஜாவின் வாரிசுகள் உள்ளார்கள். அவர்கள் தான் இந்த வழக்கின் 6 முதல் 8 பிரதிவாதிகள் என்றால் சரிதான்.

6. பி.வா.சா.ஆ.1 எழுதும்போது சரோஜா உயிருடன் இருந்தாரா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. வாதி அவரது அப்பா சொத்தில் பாக உரிமை கேட்டு எனக்கும் மற்ற பிரதிவாதிகளுக்கும் 01.02.2007 அறிவிப்பு கொடுத்தார் என்றால் ஞாபகம் இல்லை. அந்த வழக்கறிஞர் அறிவிப்புக்கு 9.4.2007ல் பொய்யான காரணங்களை கூறி ஒரு பதில் அறிவிப்பு கொடுத்துள்ளேன் என்றால் ஞாபகம் இல்லை.

7. 05.05.2003 அன்று நான் என்னுடைய பாகத்தை வரலட்சுமிக்கு நான் கிரையம் செய்து கொடுத்துவிட்டேன் என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் சரோஜாவும், வாதியும் கையெழுத்து போடவில்லை என்றால் சரிதான். எனது அப்பாவின் சொத்தில் வாதிக்கு 4 ல் ஒரு பாகம் உள்ளது என்றாலும் அதை மறைத்து நான் வரலட்சுமிக்கு கிரையம் கொடுத்தது செல்லாதது என்றால் சரியல்ல. நாங்கள் வாதியை தவிர்த்து 18.12.2002 ல் செய்து கொண்ட பாகப்பிரிவினை வாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் வாதிக்கு 1/4 பாகம் உள்ளது என்றாலும் அதை நான் மறுக்க முடியாது என்றாலும் சரியல்ல. வாதி பிராதில் கோரிய பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது.

மறுவிசாரணை, இல்லை

Taken down by me in open read over to the witness and acknowledged by him/her to be correct.

Sd/-Tmt.N.Valliamma
DM Cum JM
Cheyyur (FAC)